# OFFICE OF THE CHIEF ELECTORAL OFFICER

Villianur Main Road, Lawsthottam, Reddiarpalayam, Puducherry-605 010
Phone: (0413) 2292204, 2292205 / Fax: (0413) 2292206
Web: http://ceopuducherry.py.gov.in Email: ceo_pondicherry@eci.gov.in


தே. எண்: 1-1/(SplDrive)/2017 **-411** புதுச்சேரி, 9.6.2017

**பத்திரிக்கை குறிப்பு**

எந்த வாக்காளரும் விடுப்பட்டவிடகூடாது என்ற கரு பொருளுக்கு இணங்க, இந்தியத் தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் தொடர் திருத்தப்பணி காலத்தில், விடுப்பட்ட வாக்காளர்கள், குறிப்பாக 18-19 வயதுடைய வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பொருட்டு 1.7.2017 முதல் 31.7.2017 வரை சிறப்பு பணியினை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளது. மேலும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இறந்த வாக்காளர்களின் பெயரை நீக்கவும் பணித்துள்ளது.

2) இந்த சிறப்பு பணியின் போது, விடுப்பட்ட தகுதி வாய்ந்த வாக்காளர்களும், 1.1.2017 அன்று 18 வயது நிறைவடைந்த வாக்காளர்களும் தங்கள் பெயரை சேர்த்துகொள்ள படிவம் 6-ஐ -

I. அந்தந்த வாக்காளர் பதிவு அதிகாரியின் அலுவலகத்திலோ
II. தபால் மூலமாகவோ
III. தேசிய வாக்காளர்கள் சேவை இணையதளத்தின் மூலமாகவோ

சமர்பிக்கலாம்.

3) மேற்கண்ட வழிமுறைகளை தவிர கீழ்கண்ட கூடுதல் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

i) 9.7.2017 மற்றும் 23.7.2017 (ஞாயிற்றுகிழமைகள்) சிறப்பு முகாம் தினத்தன்று அனைத்து வாக்கு சாவடிகளின் வாக்கு சாவடி நிலை அதிகாரிகள் (Booth Level Officers) காலை 9 மணி முதல் மாலை 5 வரை வாக்காளர்களிடம் படிவம் 6-ஐ பெற்றுக்கொள்வார்கள்.

ii) மேலும் அனைத்து கல்லூரிகளிலும் 18 வயது நிறைவடைந்த மாணவர்களின் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பொருட்டு இரண்டு சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

iii) 1.7.2017 முதல் 31.7.2017 வரை, சிறப்பு முகாம் நடைபெறவுள்ள தேதிகளை தவிர்த்து, வாக்கு சாவடி நிலை அதிகாரிகள் (Booth Level Officers) வீடுவீடாக சென்று விடுப்பட்ட தகுதி வாய்ந்த வாக்காளர்கள் மற்றும் 18-19 வயது நிறைவடைந்த வாக்காளர்களிடம் படிவம் 6-ஐ பெற்றுக்கொள்வார்கள். இப்பணியில், வாக்கு சாவடி நிலை அதிகாரிகளுக்கு அரசியல் கட்சிகளால் நியமிக்கப்படும் வாக்கு சாவடி நிலை முகவர்கள் (Booth Level Agents) உதவியாக இருப்பார்கள்.

iv) இந்தியத் தேர்தல் ஆணையத்தின் இணையத்தளத்திலுள்ள "வாக்காளர் சேவை செயலி" (The Voters Services Mobile application) மூலமாகவும் வாக்காளர்கள் படிவம் 6-ஐ சமர்பிக்கலாம்.

v) மாநில அழைப்பு மையத்தின் இலவச தொலைபேசி எண் 1950-ஐ தொடர்பு கொண்டு படிவம் 6-ஐ சமர்பிக்க விவரங்கள் பெறலாம்.

IT cell

# OFFICE OF THE CHIEF ELECTORAL OFFICER

Villianur Main Road, Lawsthottam, Reddiarpalayam, Puducherry-605 010
Phone: (0413) 2292204, 2292205 / Fax: (0413) 2292206
Web: http://ceopuducherry.py.gov.in Email: ceo_pondicherry@eci.gov.in

vi) வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யவும், தாலுகா அலுவலகத்தில் சான்றிதழ் பெற வரும் மாணவர்களின் வசதிக்காக, அந்தந்த அலுவலகத்தில் படிவம் 6-ஐ பெற சிறப்பு கவுண்டர்கள் அமைக்கப்படவுள்ளது.

vii) மேலும் CENTAC மற்றும் CAPASC-ல் நடைபெறும் நேர்காணலுக்கு வரும் மாணவர்களிடம் படிவம் 6-ஐ வழங்குவதற்கும் பெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4) இந்த பணியின் போது, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களிடம் பெறப்பட்ட இறந்த வாக்காளர்களின் பெயர் நீக்கப்படும்.

5) இந்த பணியின் போது பெறப்பட்ட அனைத்து படிவம் 6 மற்றும் படிவம் 7ன் மூலம் இறந்தவர்கள் பெயர் 31.8.2017க்குள் நடவடிக்கை எடுக்கப்படும். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க எதிர்ப்பு (படிவம்-7), வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்ய (படிவம்-8) மற்றும் தொகுதிக்குள் இடம் மாறுபவர்கள் (படிவம்-8A) ஆகியவற்றின் மீது இந்த சிறப்பு பணி முடிந்தப்பின் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Dr. V.கந்தவேலு, இ.ஆ.ப
தலைமைத் தேர்தல் அதிகாரி